# பொற்பனைக்கோட்டை அகழாய்வில் தங்கத் தோடு, சூதுபவள மணி, எலும்பு முனைக் கருவி கண்டெடுப்பு


தங்கத் தோடு.

**புதுக்கோட்டை, ஜூலை 8:** பொற்பனைக்கோட்டை அகழாய்வில், தங்கத் தோடு, கார்லீனியன் கற்களால் உருவாக்கப்பட்ட சூதுபவள மணி, நெசவுத் தொழிலுக்குப் பயன்படுத்தப்பட்ட எலும்பு முனைக் கருவி ஆகியனவும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து தொல்லியல் துறை சனிக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு: புதுக்கோட்டை மாவட்டம் பொற்பனைக்கோட்டையில் கடந்த மே 20-ஆம் தேதி தமிழ்நாடு தொல்லியல் துறை சார்பில் அகழாய்வுப் பணி தொடங்கியது.

தற்போது மூன்று முக்கியத்துவம் வாய்ந்த தொல்பொருள்கள் சனிக்கிழமை கிடைத்துள்ளன. எச் 2 என்னும் குழியில் 133 செ.மீ. ஆழத்தில் ஆறு இதழ் கொண்ட தங்க மூக்குத்தி அல்லது தோடு ஒன்றும், பி 1 என்னும் குழியில் 140 செ.மீ. முதல் 145 செ.மீ. ஆழத்தில் எலும்பு முனைக் கருவி மற்றும் 150 செ.மீ. முதல் 160 செ.மீ. ஆழத்தில் வட்ட வடிவ சிவப்பு நிறமுடைய சூதுபவளமணி (கார்னீலியன் பாசி மணி) ஒன்றும் கிடைத்துள்ளது.

எலும்பு முனைக் கருவி நூல் நூற்பதற்காக நெசவுத் தொழிலுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. கார்னீலியன் கற்கள் வட இந்தியாவில் குறிப்பாக குஜராத் மாநிலத்தில் மட்டுமே கிடைக்கக் கூடியது. தற்போது இங்கு கிடைத்துள்ள வட்ட வடிவிலான சூதுபவள மணியானது கார்னீலியன் கற்களால் உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் வரலாற்றுத் தொடக்கக் காலத்தில் இருந்த உள்நாட்டு வணிகத்தை அறியலாம். ஆறு இதழ் கொண்ட, 0.26 கிராம் எடையுடைய தங்க மூக்குத்தி அல்லது தோடு கிடைத்திருப்பது சங்க காலத்தின் வரலாறு மற்றும் பண்பாட்டின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது. பொற்பனைக்கோட்டை அகழாய்வில் 3.11 ஏக்கர் பரப்பளவு கொண்ட அரண்மனைத் திடல் வாழ்விடப் பகுதியில் இதுவரை 5 மீட்டர் நீள அகலத்தில் 8 குழிகள் அமைக்கப்பட்டுள்ளன.

சுந்தரராஜன் என்பவர் நிலத்தில் 4 குழிகளும், மாரிமுத்து, கருப்பையா, பழனியப்பன், ரெங்கசாமி ஆகியோரின் நிலத்தில் தலா ஒரு குழிகளும் தோண்டப்பட்டு வருகின்றன. அகழாய்வுப் பணியில் அகழாய்வு இயக்குநர் தங்கதுரை தலைமையில் ஆய்வு மாணவர்கள் சுதாகர், முனுசாமி, பாரத் உள்பட 35 பேர் ஈடுபட்டுள்ளனர்.



## கீழடி 9 –ஆம் கட்ட அகழாய்வில்

# தங்க அணிகலன் உள்பட 183 தொல்பொருள்கள்

1. கீழடி 9 –ஆம் கட்ட அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தங்க ஆபரணங்கள். 2. சுடுமண்ணாலான விலங்கின உருவம். 3. குறியீடுகளுடன் கூடிய பானை ஓடுகள். 4. வட்டச் சில்லுகள். 5. மணிகள்.

**மானாமதுரை, ஜூலை 8:** கீழடியில் நடைபெற்று வரும் 9–ஆம் கட்ட அகழாய்வில் இதுவரை தங்க அணிகலன், சுடுமண் விலங்கின உருவங்கள், கண்ணாடி மணிகள், எலும்பினால் செய்யப்பட்ட கூர்முனைகள் உள்பட 183 தொல் பொருள்கள் கண்டறியப்பட்டன.

இது குறித்து தொல்லியல் துறை சனிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: சிவகங்கை மாவட்டம், கீழடியில் கடந்த ஏப்ரல் 6 –ஆம் தேதி முதல் 9 -ஆம் கட்ட அகழாய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதற்காக 9 குழிகள் தோண்டப்பட்டு, அகழாய்வு மேற்கொள்ளப்பட்டதில் தங்க அணிகலன், அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய சுடுமண்ணால் செய்யப்பட்ட விலங்கின உருவங்கள், தக்களிகள், ஆட்டக் காய்கள், வட்டச் சில்லுகள், கண்ணாடி மணிகள், அஞ்சனக் கோல்கள், செப்பு ஊசி, எலும்பினால் செய்யப்பட்ட கூர்முனைகள், இரும்பினால் செய்யப்பட்ட ஆணிகள் என மொத்தம் 183 தொல் பொருள்கள் இது வரை வெளிக்கொணரப்பட்டன. மேலும், வெவ்வேறு நிலையிலிருந்த எலும்பு, கரி மாதிரிகள் அறிவியல் பகுப்பாய்வுக்காக சேகரிக்கப்பட்டன.

முதல் கட்டமாக அகழ்ந்தெடுக்கப்பட்ட நான்கு அகழாய்வுக் குழிகளில் சுமார் 35 செ.மீ. ஆழத்தில் களிமண், சுண்ணாம்புக் கலவையைக் கொண்டு அமைக்கப்பட்ட தரைத் தளம் கண்டறியப்பட்டது. இது 3 செ.மீ. முதல் 6 செ.மீ. தடிமனுடன் காணப்படுகிறது. இந்த அகழாய்வுக் குழிகளில் தரைத் தளத்தின் கீழே சுமார் 2 அடி ஆழத்துக்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட கருப்பு, சிவப்பு பூச்சு, சிவப்பு நிற பானை ஓடுகள் குவியலாகக் கண்டறியப்பட்டன.

மேலும், துளையிடப்பட்ட பானை ஓடுகள், வண்ணம் தீட்டப்பட்ட பானை ஓடுகள், ரசம் பூசப்பட்ட பானை ஓடுகள், அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய பானை ஓடுகள் கண்டறியப்பட்டன.

இந்தப் பானை ஓடுகளை ஆய்வு செய்ததில் மீன், ஏணி, வடிவியல் சார்ந்த குறியீடுகள் என நூற்றுக்கும் மேற்பட்ட குறியீடுகள் அடையாளம் காணப்பட்டன.

**கொந்தகை:** கீழடி அருகேயுள்ள கொந்தகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நான்காம் கட்ட அகழாய்வில்10 -க்கு 10 மீட்டர் அளவில் தோண்டப்பட்ட அகழாய்வுக் குழியில் இது வரை 17 முதுமக்கள் தாழிகள் மூன்று நிலைகளில் கண்டறியப்பட்டன என அதில் தெரிவிக்கப்பட்டது.

# தனித்தமிழ் இயக்கமும் மறைமலை அடிகளும்

கவிஞர் முத்துலிங்கம்

தனித்தமிழ் இயக்கத்தைத் தோற்றுவித்தவர் **மறைமலை அடிகளார்** என்பதும் அவருக்கு அந்த எண்ணம் ஏற்பட அவர் மகள் நீலாம்பிகை அம்மையார்தான் காரணம் என்பதும் தமிழ் உலகம் அறிந்த ஒன்று.

அத்தகைய மறைமலை அடிகளார்தான் 'தமிழர்கள் தங்கள் தாய்மொழியோடு வேறொரு அயல் மொழியையும் கற்றுக் கொள்ள வேண்டும். அப்போதுதான் தமிழின் பெருமையை அந்த அயல்மொழியாளர்கள் அனைவரும் அறியும் வகையில் பரப்ப முடியும். இல்லையென்றால் நமக்குள் மட்டுமே தமிழைப் பேசிக் கொண்டிருக்க முடியும்' என்று கூறினார்.

மறைமலை அடிகள் தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மூன்றிலும் பெரும் புலமை பெற்றவர். அதனால்தான் ஆங்கிலத்தில் இருந்த எடிசனின் அறிவியல் பற்றிய கருத்தமைந்த புத்தகங்களையெல்லாம் தமிழில் மொழிபெயர்த்து தமிழர்கள் அனைவரும் எடிசனின் விஞ்ஞான நுட்பத்தை அறிந்துகொள்ளச் செய்தார்.

வடமொழியில் சிறந்த புலமை பெற்றிருந்த காரணத்தால்தான் காளிதாசரின் சாகுந்தலத்தைத் தமிழில் மொழியாக்கம் செய்து காளிதாசரின் காவியப் புலமையை நமக்குணர்த்தினார். மறைந்த காஞ்சிப் பெரியவர் சந்திரசேகரேந்திரர் இதைப் பலபடப் பாராட்டிக் கூறி அடிகளாரின் சாகுந்தலம் பற்றிக் கல்லூரி மாணாக்கரிடையே கட்டுரைப் போட்டி நடத்திப் பரிசளித்துச் சிறப்பித்தார்.

நான் பள்ளியில் படிக்கின்ற காலத்திலேயே மறைமலை அடிகளின் சாகுந்தலத்தையும், மாணிக்கவாசகர் வரலாறும் காலமும் நூலையும் முல்லைப்பாட்டு ஆராய்ச்சி, பட்டினப் பாலை ஆராய்ச்சி நூல்களையும் படித்திருக்கிறேன்.

மறைமலை அடிகளார் தாம் எழுதிய அனைத்து நூல்களுக்கும் ஆங்கிலத்தில்தான் முன்னுரை எழுதினார். ஏனென்றால் தமிழ் தெரியாதவர்கள் அந்த முன்னுரையைப் படித்தால் அத்தகைய சிறப்புக்குரிய தமிழைத் தாமும் படிப்பார்கள் என்பதற்காகத்தான்.



இப்படிப் பல மொழிகளில் புலமையிருந்தாலும் அவரவர் தங்கள் தாய்மொழியில்தான் அனைத்தையும் படிக்க வேண்டும் என்ற கருத்துடையவராய் இருந்தார். ஆக தனித் தமிழ் பேச வேண்டும், எழுத வேண்டும் என்பவர்கள் ஆங்கிலம், ஹிந்தி, சம்ஸ்கிருதம் போன்ற மொழிகளுக்கு எதிர்ப்பானவர்கள் அல்லர் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். **'பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்'** என்ற பாரதியின் கருத்தை நிறைவேற்றியவர் அடிகளார்தான்.

1927 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23, 24 ஆகிய தேதிகளில் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் வெள்ளிவிழா இரண்டு நாட்கள் கரந்தையில் நடைபெற்றது. மறைமலை அடிகளார்தான் அதற்குத் தலைமை வகித்தார். பண்டிதமணி கதிரேசன் செட்டியார் போன்றவர்களெல்லாம் அதில் கலந்து கொண்டார்கள்.

பண்டிதமணி கதிரேசன் செட்டியார் பேசும்போது 'சலம் பூவோடு தூபம் மறந்தறியேன் தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்' என்ற அப்பர் பாடலை எடுத்துக்காட்டி 'சலம் என்ற வடசொல்லைக் கலந்து அப்பர் பாடியிருக்கிறார். ஆகவே சைவப் பற்றாளர்களாகிய நாமும் வடசொல்லைக் கலந்து எழுதலாம் அதில் தவறில்லை' என்றார்.

உடனே மறைமலை அடிகளார் எழுந்து 'சலம்' என்ற சொல் வடசொல் என்று யார் சொன்னது 'சலசல மும்மதம் பொழியும்' என்று சங்கப் பாடலிலே கூறப்பட்டுள்ளது. சலம் என்பது தமிழ்ச் சொல்தான். சலசல என்ற ஓசையுடன் ஓடுவதால் அதற்கு சலம் என்று பெயரிட்டார்கள். சலம் என்பது காரணப்பெயர். இதை வடமொழியாளர்கள் 'ஜலம்' என்று ஆக்கிக் கொண்டார்கள்' என்று ஆணி அடித்தாற்போல் கூறினார். தனித்தமிழ் உணர்வு நாடெங்கும் பரவ இதுவே அடிப்படைக் காரணமாக அமைந்தது.

இதற்கு சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் மறைமலை அடிகளாரும் அவர் மகள் நீலாம்பிகை அம்மையாரும் அவர்கள் வீட்டுத் தோட்டத்தில் உலவிக் கொண்டிருந்தபோது.

**பெற்ற தாய்தனை மகமறந் தாலும்**
**பிள்ளையைப் பெறும் தாய் மறந்தாலும்**
**உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும்**
**உயிரை மேவிய உடல் மறந்தாலும்**

என்ற வள்ளலார் பாடலைப் பாடி, 'இதில் உற்ற தேகத்தை என்பதற்குப் பதிலாக உற்ற **யாக்கையை** என்ற நல்ல தமிழ்ச் சொல் போட்டிருந்தால் இன்னும் இனிமை அதிகமாக இருக்கும் நீலா' என்று தன் மகளைப் பார்த்து அடிகளார் கூறினார்.

மேலும் இதைப்போன்ற வட சொற்கள் அதிகம் கலந்ததால் அதற்கு நிகரான பல தமிழ்ச் சொற்கள் வழக்கிழந்து விட்டன என்றும் இன்னும் பல சொற்கள் மறைந்துவிட்டன என்றும் கூறியிருக்கிறார்.

அப்படியானால் நாம் இனிமேல் அயல் மொழிச் சொற்களை நீக்கி தூய தமிழில் எழுத வேண்டும் பேச வேண்டும் என்றும் அதை இன்றே தொடங்கலாமே என்றும் நீலாம்பிகை அம்மையார் கூற அன்றே அடிகள் அதைச் செயல்படுத்தத் தொடங்கினார்.

'வேதாசலம்' என்ற தம் பெயரை '**மறைமலை அடிகள்**' என்றும் தாம் நடத்தி வந்த '**ஞான சாகரம்**' என்ற இதழை '**அறிவுக் கடல்**' என்றும் '**சமரச சன்மார்க்க நிலையம்**' என்ற தம் மாளிகைப் பெயரைப் '**பொதுநிலைக் கழகம்**' எனவும் மாற்றினார். இது நடந்தது 1916-இல்.

அடிகளாருக்கு முன்பே தனித்தமிழ் உணர்வு படைத்தவர்கள் பலர் இருந்தார்கள். இவரை விட வயதில் மூத்தவர் வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரியார். தனித்தமிழ்ப் பற்றின் காரணமாகத் தம் பெயரைப் 'பரிதிமாற் கலைஞர்' என்று மாற்றிக் கொண்டார்.

மறைமலை அடிகள் 1876-இல் பிறந்து 1950-இல் மறைந்தார். தனித்தமிழ் உணர்வு பலரிடம் இருந்தாலும் அன்றைக்குத் தனித்தமிழ் உணர்வை ஓர் இயக்கமாக மாற்றியவர் மறைமலை அடிகளார்தான். இலக்கியத் தேடலில் உ.வே.சா.வின் அரும்பெரும் முயற்சியைப் பலபடப் பாராட்டியவர் அடிகளார்.

அவருக்குப் பிறகு பேராசிரியர் டாக்டர் சி. இலக்குவனார் '**தமிழ்ப் பாதுகாப்புக் கழகம்**' என்ற பெயரில் ஒரு அமைப்பைத் தொடங்கித் தூய தமிழ் வளர்ப்புத் தொண்டு புரிந்தார். அதன்பின் பெருஞ்சித்திரனாரால் தொடங்கப் பெற்ற உலகத் தமிழ்க் கழகத்திற்கு **தேவநேயப் பாவாணர்** தலைவராய் இருந்து தனித்தமிழை வளர்த்தார். பாவாணரே ஒரு தமிழ் இயக்கமாக இருந்தவர்தான்.

மறைமலை அடிகளின் தனித்தமிழ் இயக்கத்தை வரவேற்றுப் பாராட்டியவர்களில் கி.ஆ.பெ. விசுவநாதம் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். வாழ்க மறைமலை அடிகள் புகழ்.

**ஜூலை 15 மறைமலை அடிகள் பிறந்தநாள்**

# இந்தியா – தான்சானியா இடையே சொந்த செலாவணியில் வர்த்தகம் தொடக்கம்

டார் எஸ் சலாம், ஜூலை 8: 'இந்தியா - தான்சானியா இடையே சொந்த செலாவணியில் வர்த்தகம் தொடங்கப்பட்டிருக்கிறது. இந்த புதிய முயற்சி இரு நாடுகளிடையேயான வர்த்தக உறவை மேலும் வலுப்படுத்த உதவும்' என்று வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

தான்சானியாவுக்கு இரண்டு நாள் பயணமாக சென்ற ஜெய்சங்கர், பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்று வருகிறார். அங்கு தன்னாட்சி அதிகாரம்பெற்ற ஜான்ஜிபார் அதிபர் ஹுசைன் அலி மைவினியை வெள்ளிக்கிழமை சந்தித்து இருதரப்பு உறவை வலுப்படுத்துவது குறித்து ஆலோசனை மேற்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து தான்சானியாவின் டார் எஸ் சலாம் நகருக்கு சனிக்கிழமை வந்த ஜெய்சங்கர், அங்கு இந்திய-தான்சானியா வர்த்தக மாநாட்டையும் தொடங்கி வைத்து, தொழில்நிறுவனத் தலைவர்கள் மத்தியில் பேசியதாவது:

இந்தியா-தான்சானியா இடையேயான இருதரப்பு வர்த்தகம் மிக வலுவான வளர்ச்சியை பெற்றுள்ளது. இரு தரப்பு வர்த்தகம்

**அமைச்சர் ஜெய்சங்கர்**



தான்சானியா அதிபர் சமியா ஹுசனை சந்தித்த வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர்.

2022-23-ஆம் ஆண்டில் ரூ. 52,873 கோடியை எட்டியுள்ளது. இரு நாடுகளிடையேயான இந்த உறவு நீடித்த வர்த்தக உறவு மட்டுமின்றி, மிகுந்த சமநிலையை அளிக்கும் உண்மையான வர்த்தக உறவாகும். இருதரப்பு வர்த்தக தொகுப்பில் பல புதிய பொருள்கள் தற்போது சேர்க்கப்பட்டிருக்கின்றனர். தான்சானியா ஏற்றுமதியாளர்களுக்கு இந்தியாமிகப் பெரிய வர்த்தக மையமாகத் திகழ்கிறது.

இந்த இருதரப்பு வர்த்தகத்தை சொந்த செலாவணியில் மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கைகள் அவ்வப்போது முன்வைக்கப்பட்டு வந்தன. இதற்கான ஒப்புதலை இந்திய ரிசர்வ் வங்கி தற்போது அளித்திருக்கிறது. இதன் மூலமாக, தான்சானியாவில் செயல்பட்டுவரும் பாங்க் ஆஃப் இந்தியா, பாங்க் ஆஃப் பரோடா, கனரா வங்கி ஆகிய மூன்று இந்திய வங்கிகளும், இரு நாடுகளும் சொந்த செலாவணியில் வர்த்தகம் மேற்கொள்வதற்கான உரிய தீர்வுகளை அளிக்க முடியும்.

மேலும், இரு நாடுகளிடையே இந்திய ரூபாயிலும், தான்சானியாவின் ஷில்லிங்கிலும் ஏற்கெனவே சில வர்த்தக பரிவர்த்தனைகளைத் தொடங்கிவிட்டதாக தகவல் தெரிவிக்கப்பட்டது. இந்த புதிய முயற்சி, இரு நாடுகளிடையேயான வர்த்தகத்தை மேலும் வலுப்படுத்த உதவும்.

இந்தியா - ஆப்பிரிக்கா இடையேயான வர்த்தக உறவும் வலுவாக உள்ளது. ஆப்பிரிக்காவுடன் ரூ.8,09,631 கோடி மதிப்பிலான வர்த்தகத்தை இந்தியா மேற்கொண்டு வருகிறது. ஆப்பிரிக்காவுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை மேற்கொள்வது இருநாடுகளிடையேயான வர்த்தகத்தையும் முதலீடுகளையும் மேலும் எளிதாக்கும் என்று ஜெய்சங்கர் கூறினார்.

முன்னதாக டார் எஸ் சலாமில் உள்ள இந்திய கலாசார மையத்தில் சுவாமி விவேகானந்தரின் மார்பளவு சிலையை ஜெய்சங்கர் திறந்து வைத்தார்.

# அமெரிக்க சந்தையிலிருந்து மூச்சுக்குழாய் அழற்சி மருந்தை திரும்பப் பெறும் 'சிப்லா'

**புது தில்லி, ஜூலை 8:** அமெரிக்க சந்தைகளிலிருந்து மூச்சுக்குழாய் அழற்சி சிகிச்சைக்கான 'அல்புடரோல் சல்ஃபேட்' என்ற உள்ளிழுக்கும் மருந்தின் 6 தொகுப்புகளை தானாக திரும்பப் பெறுவதாக இந்தியாவின் மிகப் பெரிய மருந்து உற்பத்தி நிறுவனமான சிப்லா தெரிவித்துள்ளது.




அமெரிக்காவில் செயல்படும் சிப்லா நிறுவனத்தின் துணை நிறுவனமான சிப்லா-யுஎஸ்ஏ இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. கன்டெய்னர் குறைபாடு காரணமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக, மருந்து தரக் கட்டுப்பாட்டு ஆணையத்திடம் தாக்கல் செய்த அறிக்கையில் இத்தகவலை சிப்லா நிறுவனம் தெரிவித்துள்ளது.

அறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது:

அமெரிக்காவுக்கு கடந்த 2021-ஆம் ஆண்டு நவம்பரில் உற்பத்தி செய்யப்பட்டு அனுப்பப்பட்ட, மூச்சுவிடுவதில் சிரமம், இருமல் போன்ற பிரச்னைகளுக்கு காரணமாக உள்ள மூச்சுக்குழாய் அழற்சி சிகிச்சைக்கு பயன்படுத்தப்படும் 'அல்புடரோல் சல்ஃபேட்' என்ற 90 மில்லிகிராம் அளவுடைய உள்ளிழுக்கும் மருந்து கருவியின் வால்வு பகுதியில் கசிவு ஏற்படுவதாக புகார் தெரிவிக்கப்பட்டது. அதனடிப்படையில், அதே வால்வுகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டு அமெரிக்க சந்தையில் விநியோகிக்கப்பட்ட 6 தொகுப்பு 'அல்புடரோல் சல்ஃபேட்' மருந்துகளைத் திரும்பப் பெற முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த மருந்தினால் நோயாளிகளுக்கு எந்தவித தீவிர பாதிப்பும் இதுவரை பதிவாகவில்லை. எனவே, மருந்துகள் திரும்பப் பெறப்படுவதற்கு, அதுபோன்ற காரணமில்லை.

இந்த மருந்து திரும்பப் பெறப்படுவது குறித்து மருந்து விநியோகஸ்தர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு கடிதம் மூலமாக அறிவுறுத்தல் வழங்கப்பட்டு வருகிறது. திரும்பப் பெறப்படும் அனைத்து மருந்துகளுக்கும் மாற்று வழங்கப்படும். எனவே, குறிப்பிட்ட இந்த 6 தொகுப்பு மருந்துகளை பயன்படுத்துவதை விநியோகஸ்தர்களும், வாடிக்கையாளர்களும் கைவிட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று சிப்லா நிறுவனம் தெரிவித்துள்ளது.

EVA STALIN IAS